உ

சிவமயம்



EVELYN RUTNAM LIBRARY
JAFFNA
40/11

## யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை

விஸ்வப்பிரம்மகுல திலகர்

## அமரர் திரு. நா. கனகசபை
## பத்தர் அவர்களின்

## ஞாபகார்த்த

# நினைவஞ்சலி மலர்

## திதி : 4 - 10 - 1986

ஏசியன் பிறின்ரேஸ், 28, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

# அமரர் நா. கனகசபை பத்தர்

## அவர்கள்



தோற்றம் :
25-3-1904

மறைவு :
4-9-1986

உ

சிவமயம்

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனைமு கத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின் றேனே.

## தேவாரம்

ஒன்றொரு மாயெனக் கெத்தை மாயுடன் தோன்றினராய்
மூன்றாயுலகம் படைத்துகந்தான் மனந்துள்ளிருக்க
ஒன்று னிமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றுத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்குவர்க்கே.

## திருவாசகம்

உற்றாரை யான் வேண்டேன் ஊர்
வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவு மினி யமையுங்
குற்றாலத் தமர்ந் துறையுங்
கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக்கண்டு கண்டுள்ளங்
குளிர வென்கண் குளிர்ந்தனவே.

### திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
  பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன்
  மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
  சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
  பல்லாண்டு கூறுதுமே.

### திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
  பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
  உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
  நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின்
  கீழ் இருக்க என்றார்.

### திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
  பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
  முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
  ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
  வெற்றிவே லாயுதப் பெருமாளே.

### வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க — மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறையறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

# வாழ்க்கை வரலாறு

உத்தமர் பலர் வாழும் நற்திருப்பதியாம் ஊர்காவற்துறையிலே, கற்றவர் உறையும் கரம்பன் என்ற இடத்திலே வீரவாகு நாகலிங்கம் என்பவர் விஸ்வப் பிரம்ம குல திலகராக நல்வாழ்வு வாழ்ந்து வந்தார். அவருக்கு கொக்குவிற்பதியிலே வாழ்ந்த செல்லம் என்னும் பெண்ணைப் பெரியோர்கள் திருமணம் செய்து கொடுத்தனர்.

இந்த நாகலிங்கம்-செல்லம் தம்பதியினருக்கு நாகம்மா என்ற பெண் குழந்தை பிறந்தது. தனக்கு ஓர் ஆண்குழந்தை வேண்டும் என்ற நோக்குடன் இறைவனை வேண்டி நின்றார். அங்ஙனம் வேண்டியதன் பேரில் இறைவனருளால் 1904 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25 ம் திகதி ஒரு ஆண் குழந்தை பிறந்தது தில்லையம்பலத்திலே ஆடுகின்ற அரனருளால் பிறந்தபடியால் 'கனகசபை' என்ற திருநாமம் சூட்டிப் பிள்ளையை வளர்த்து வந்தனர். இவருக்கு இராசம்மா என்ற ஒரு சகோதரியும் பிறந்தார்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பிள்ளை வளர்ந்து வரலாயிற்று. உரிய பருவத்திலே வித்தியாரம்பம் செய்யப் பெறறு கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினார் இவரது வளர்ச்சியைக் கண்ட பெரியோர்கள் குலத் தொழிலாகிய பொன் ஆபரணஞ் செய்யும் வித்தையைக்' கற்றுக் கொடுத்தனர். விஸ்வப் பிரம்மகுல வழித் தோன்றலான கனகசபை கண்ணியம் மிக்க புண்ணிய தொழிலாக அதனை செவ்வனே செய்து புகழீட்டினார்.

'நம்பிக்கை நாணயம் என்பதற்கு ஒரு கனகசபை' என்று சொல்லும் அளவிற்கு மக்கள் மத்தியிலே பிரபல்யம் பெற்று விளங்கிய இவருக்கு நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை மாணிக்கம் தம்பதிகளின் புத்திரி இராசரத்தினம்மா என்னும் பெண்ணை விவாகஞ் செய்து வைத்தனர்.

'அறன் எனப்பட்டதே, இல்வாழ்க்கை' என்பதற்கிணங்க இல்லற வாழ்வை தவவாழ்வாக மேற்கொண்டார். இப்படியிருக்கும் நாளில் புத்திர சந்தானம் இல்லாமையினாலே கவலைகொண்டு க்ஷேத்திராடனம் புறப்பட்டார். ஆலயவழிபாடு அவருக்கு அருமையான பலனைக் கொடுத்தது ஐந்து ஆண்டுகளின் பின் 11-10-29 இல் செய்தவப்பயனால் கனகசபைக்கு

ஓர் ஆண் குழந்தை பிறந்தது. தில்லைநடராஜனருளால் பிறந்த குழந்தைக்கு நடராஜா என்று நாமம் சூட்டி வளர்த்து வரலானார்கள்

'தந்தை எவ்வழி மைந்தன் அவ்வழி' என்பது போல் நடராஜாவும் நன்கு படித்து முன்னேறி வந்தார். பரமேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்றுப் பட்டதாரியானார். பின்பு கொழும்பில் படவரைஞராக அரசாங்க சேவையில் அமர்ந்தார் 1960ம் ஆண்டு பெரியோர் இவருக்குச் சரஸ்வதி என்னும் பெண்ணை திருமணஞ்செய்து வைத்தனர். இவர்களும் குழந்தை இல்லாது இறைவனை வேண்டித் தவங் கிடந்தனர் அதன் பயனாய் ஆறு ஆண்டுகளின் பின் இவர்களுக்கு 'நந்தகுமார் என்ற ஓர் ஆண்குழந்தை பிறந்தது. இதுதான் கனகசபையின் பேரக்குழந்தையாகும்.

இவ்வாறிருக்கும் போது நடராஜா 26-5-1670ல் திடீர் விபத்து ஒன்றில் அகாலமரணமடைந்தார் இது இவருக்கு தீராத கவலையைக் கொடுத்தது. காமாக்ஷி அம்பாளைக் கைதொழுது விதிப்பயனிது' என்று தெளிந்து தொண்டு செய்வதிலேயே தன் வாழ்நாளைக் கழிக்க எண்ணி அம்பிகையை கைதொழுதால் அதிகவரம் பெறலாமே என்று வண்ணை ஸ்ரீகாமாக்ஷி அம்பாளுக்கு திருப்பணிகள் பல புரிந்தார்·தேர்த்திருப்பணி ராஜகோபுரத்திருப்பணி, திருக்கிணறு திருத்தவேலை முதலானவற்றைச் செய்தார். மணிக்கோபுரம் முழுமையாக கட்டி முடித்தார். அதிலுள்ள மணி இன்றும் அவரது நினைவாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. நாதம் கேட்டதும் கனகசபையின் நினைவும்கூடவே வரும்.

இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் சேவை மனப்பான்மை கொண்டவராய் சமூகத் தொண்டு பல புரிந்தார். 62 ஆண்டுகள் இல்லற வாழ்வு வாழ்ந்தார்

அதிகநாள் அவனியில் அல்லற்பட்டு வாழ்ந்தது போதுமென்று அம்பிகை அவரைத் தன்னடியில் சேர்த்துக் கொள்ள எண்ணி 4-09-1986 இல் பூதவுடலை விட்டுப் புகழுடம்பைப் பெற்றுக் கொண்டார்

அன்னாரின் நினைவாக இந்த மலரை உங்கள் முன் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.

# நினைவு அலைகளில் நீங்காத உணர்வுகள்

எம்முடன் பிறந்து, எம்முடன் வாழ்ந்து, எமது சுகதுக்கங்களில் பங்கு கொண்டு, தூய அறப்பணிகள் பல ஆற்றியவர்கள் எம்மைவிட்டுப் பிரியும் போது அவர்கள் இம்மண்ணில் விட்டுச் செல்லும் நீங்காத நினைவுகளில் தோன்றும் உணர்வுகளை நாம் மறக்கலாமா?

யாழ் / வண்ணையம்பதியில் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயில் கொண்டருளியுள்ள நாச்சிமார் கோவிலடியில் விஸ்வகுலத்தவரின் பெருமைக்குரியவராகத் தோன்றிய திரு நா. கனகசபைப்பத்தர் அவர்கள் குறிப்பாக எமது ஆலய நிர்வாகசபையில் முது பெரும் உறுப்பினராகப் பல காலம் இருந்து உயிர் நீக்கும் வரை ஆற்றிய சேவைகளை நாம் மறக்கலாமா?

சித்திரைத் திங்களில் அம்பாள் பவனி வரும் சித்திரத்தேரும், வானளாவிய இராஜகோபுரமும் சிறப்புடன் அமைய அன்னார் ஆற்றிய தொண்டும், வாரி வழங்கிய பொன்னும், ஏன் இன்று அவரின் முழு நினைவாக ஒலித்துக் கொண்டு இருக்கும் மணிக்கூட்டுக் கோபுரமும். மணியும் நாம் நினைவு கூரும் போது அவரின் நீங்காத உணர்வுகள் எம் நெஞ்சத்தில் மட்டுமல்ல உடலெங்கும் ஊடுருவுகின்றன.

இவரின் மறைவு இவர் பிறந்த குலத்திற்கும், இனத்திற்கும், எமது ஆலய வளர்ச்சிக்கும் ஈடுஇணையற்ற இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைந்து அம்பிகையின் பாதக்கமலங்களில் என்றும் பேரின்பத்தை அடைய நாம் பிராத்தித்து நிற்கிறோம்.

யாழ் / வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள்
தேவஸ்தானம்.

தர்மகர்த்தாசபையினர்.

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத் தலைவரின் அமரத்துவ நாளன்று சமூகமளித்தும் தந்தி, தபால்கள் மூலம் அனுதாபமும் வேண்டிய உதவிகளும் அளித்தோர்க்கும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியங்களிற் கலந்து சிறப்பித்தோர்க்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

வணக்கம்.

14/1, சேர் பொன் இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
மனைவி, மருமகள், பேரன்.